
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1118

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

159

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

## மாமேதை கார்ல் மார்க்ஸ் சிலை!

### திராவிட அரசில் சிவந்தது சென்னை!




சமூக மாற்றத்துக்கு வித்திட்ட தலைவர்களின் சிலைகள் வெறும் நினைவுச் சின்னங்கள் மட்டுமல்ல; அவை, அவர்களின் அரசியலை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் விதைகளாக இருப்பவை. தமிழ்நாட்டின் அரசியல் - சமூக செயல்பாடுகளில் அடையாளங்களாகத் திகழ்பவை. அதனால்தான் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிலைகள் ஊர்தோறும் ஊர்தோறும் முளைக்கின்றன. அந்த வகையில் தமிழ்நாட்டில், உலகத் தொழிலாளர்களைத் தனது தத்துவ விசாரணைகள்மூலம் தட்டி எழுப்பிய மாமேதை கார்ல் மார்க்ஸுக்கு சிலையை எழுப்பி பெருமை கொண்டுள்ளது, திராவிட மாடல் ஆட்சி.

2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ஆம் தேதி, சட்டமன்ற கூட்டத்தொடரின்போது, விதி 110-ன் கீழ் சிறப்பு அறிவிப்பாக சென்னையில் கார்ல் மார்க்ஸுக்கு சிலை நிறுவுவதற்கான அறிவிப்பை வெளியிட்டார், நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். 'உலக மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களைப் பெருமைப்படுத்திட, போற்றிட, இந்த திராவிட மாடல் அரசு விரும்புகிறது' என அவரது அறிவிப்பில், மார்க்ஸுக்கு சென்னையில் சிலை நிறுவுவதன் அவசியத்தை, காரணத்தை விளக்கினார்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொழிற்சங்க இயக்கம் கோலோச்சிய சென்னை மாநகரில், மாமேதை மார்க்ஸ் சிலை அமைவது பொருத்தமானது எனத் தமிழ்நாட்டின் சமூக நீதி, சமத்துவ அரசியல் சக்திகள் அனைவரும் அந்த அறிவிப்பை வரவேற்றனர்.

சென்னையில் 'கார்ல் மார்க்ஸ் சிலை அமைப்புக் குழு' என பேராசிரியர் அ.மார்க்ஸ் தலைமையிலான ஒரு குழு முயற்சிகளை மேற்கொண்டது. அரசின் சார்பில் இடம் வழங்க வேண்டும் என்கிற கோரிக்கைகளுடன், பல தலைவர்களையும் அந்தக் குழுவினர் சந்தித்தனர். அந்தக் கோரிக்கையை சி.பி.எம். கட்சி, அரசின் சார்பில் சிலை அமைக்க வேண்டும் என முதலமைச்சருக்கு கோரிக்கையாகக் கொண்டுசெல்ல, 'சிவந்தது சென்னை' என மிகச் சிறப்பான சிலையை அமைத்துத்தந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

**கன்னிமாரா நூலகமே பொருத்தம்**

அதையடுத்து, மார்க்ஸ் சிலை அமைப்பதற்கான இடங்கள் ஆய்வுசெய்யப்பட்டு, முதலில் நந்தனம் அரசுக் கல்லூரி வளாகத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டது. தன் வாழ்நாளில் பெரும்பகுதியை நூலகத்தில் செலவிட்ட அந்த மாமேதைக்கு சென்னை, எழும்பூர் கன்னிமாரா பொது நூலகத்தின் வாயிலில் சிலை அமைக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுந்ததையடுத்து, அவ்வாறே தமிழ்நாடு அரசு பணிகளைத் தொடங்கியது.

அதையடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 85 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் சிலை அமைக்கப்பட்டு, கன்னிமாரா நூலக வாயிலில் மிகப் பிரமாண்டமாக நிறுவப்பட்டது. 2026 பிப்ரவரி 6-ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டின் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ள, மார்க்ஸ் சிலையைத் திறந்து வைத்தார் நம் முதலமைச்சர். மார்க்ஸ் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியதுடன், நிகழ்ச்சியையொட்டி மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்று புகைப்படக் கண்காட்சியும் அங்கு அமைக்கப்பட்டிருந்தது.



சென்னையில் கார்ல் மார்க்ஸ் சிலையை வடிவமைத்தவர் சிற்பி கார்த்திகேயன். ஒன்பதரை அடி உயரத்தில் நிறுவப்பட்ட இந்த வெண்கலச் சிலையை உருவாக்க மூன்று மாதங்கள் ஆனது. 'இம்பாஸ்டோ' (Impasto) என்கிற புடைப்புச் சிற்ப பாணியில் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதனின் வலிமை, கடின உழைப்பு அல்லது தீவிரமான சிந்தனையை வெளிப்படுத்த இதுபோன்ற பாணி பயன் படுத்தப்படுகிறது. கார்ல் மார்க்ஸ் பிறந்த ஊரான ஜெர்மனின் ட்ரையர் நகரத்தில் இதுபோன்ற சிலை உள்ளது. அதே பாணியில் தற்போது சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

சிலை திறப்பு குறித்து முதலமைச்சர் தனது எக்ஸ் பக்கத்தில், மாமேதை கார்ல் மார்க்ஸ் சிலை திறப்பு: 'சிவந்தது சென்னை!' எனப் பெருமையுடன் குறிப்பிட்டு, "நல்லவை எங்கிருந்து வந்தாலும் வணங்கி ஏற்றுக்கொள்வோம். அல்லவை ஆதிக்கம் செலுத்தப் பார்த்தால் தடுத்து நிறுத்துவோம். இதுதான் திராவிட மாடல்!" என்றும் குறிப்பிட்டிருந்தார்.

> நல்லவை எங்கிருந்து வந்தாலும் வணங்கி ஏற்றுக்கொள்வோம். அல்லவை ஆதிக்கம் செலுத்தப் பார்த்தால் தடுத்து நிறுத்துவோம்.

**திராவிடத்தின் திசை**

சென்னையில் கார்ல் மார்க்ஸ் சிலை நிறுவப்பட்ட நிகழ்ச்சி, ஒரு சாதாரண நினைவுச் சின்னம் அமைத்தல் அல்ல; அது தமிழ்நாட்டின் அரசியல் திசை, சிந்தனை அடையாளம் மற்றும் ஆட்சிக் கருத்தியல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் நடவடிக்கையாகச் சொல்லாமல் சொல்லப்பட்ட செய்தி.

"இழப்பதற்கு அடிமைச் சங்கிலிகளைத் தவிர ஒன்றுமில்லை. அடைவதற்கோ பொன்னுலகம் காத்திருக்கிறது" என உலகத் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டிய பொதுவுடைமைத் தத்துவத்தின் பிதாமகன் கார்ல் மார்க்ஸ் சிலை கன்னிமாரா பொது நூலக வளாகத்தில் நிலைகொண்டதன் மூலம், திராவிட மாடல் அரசு சமூக நீதி மற்றும் சமத்துவத்தை வலியுறுத்தும் அரசு என்பதை உலகுக்கு அறிவித்துள்ளார் நம் முதலமைச்சர்.

...சாதனை தொடரும்

## விஸ்வகுரு அரசின் காதுகளில் ஒலிக்கட்டும்!

புதுடெல்லி AI மாநாட்டில், கல்கோட்டியா பல்கலைக்கழகத்தின் மோசடி அம்பலமாகியுள்ள இந்த நேரத்தில், பரக்கலா பிரபாகர் அவர்களின் ஒரு கட்டுரையினை முகநூலில் பகிர்ந்துள்ளார், மூத்த பத்திரிகையாளர் ஆர்.விஜயசங்கர். 'நமது பல்கலைக்கழகங்கள், மிகச் சிறந்தவைகூட போதுமான அளவு நல்லவை இல்லையோ?' என்கிற அந்தக் கட்டுரையிலிருந்து கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியில் உலகத் தரத்தை நம் உயர்கல்வி அடையவும், நம் பல்கலைக்கழகங்கள் அனைவரையும் உள்ளடக்கிய துடிப்பான நிறுவனங்களாகவும் தேவையான உத்தி நம்முடைய புதிய கல்விக் கொள்கையில் பரிதாபமான அளவுக்குக் குறைவாக இருக்கிறது; அதற்குப் பதிலாக, அது நிர்வாகரீதியான திருகல்களைத்தான் அதிகம் செய்கிறது.

ஆட்சியிலிருப்பவர்கள், காவல் துறையினரையும் முகமூடியணிந்த குண்டர்களையும் கல்வி வளாகங்களுக்குள் அனுப்பி, மாணவர்களைத் தாக்குவதும் தீவிர அரசியல் செயல்பாட்டில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களுக்கு எதிராக தேசத் துரோக வழக்குப் பதிவு செய்வதும் பல்கலைக்கழங்களைச் சிறப்புறச் செய்யும் நோக்கத்திற்கு எவ்விதத்திலும் உதவாது.

தன் கல்வி அமைச்சகத்தின் கீழ் நடத்தப்படும் நிர்ஃப் (NIRF) மதிப்பீட்டில் அதிக மதிப்பெண்கள் பெற்ற நிறுவனங்களே இந்த அரசின் தீவிர தத்துவவியலாளர்கள் மற்றும் அடியாட்களின் தாக்குதலுக்கு ஆளாகின்றன என்பது கல்வி குறித்து இந்த அரசுக்கு இருக்கும் சிந்தனை என்ன என்பதை நமக்குப் புரியவைக்கின்றது.

நமது பல்கலைக்கழகங்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் நிதியும், ஆராய்ச்சி வசதிகளில் முதலீடும், பல பிரிவினருக்கும் இடம் வழங்கிப் பன்மைத்துவத்தைப் பேணும் கொள்கையும், நல்ல ஆசிரியர்-மாணவர் விகிதமும், புதுமைகளை ஊக்குவிக்கும் ஒட்டுமொத்த அமைப்பும், வழக்கத்தில் இருப்பவற்றைக் கேள்விக்குள்ளாக்கும் சூழலும், அரசியல், அறிவியல், கல்வி ஆகியவற்றின் அதிகார அமைப்புகளுக்கும், மதக் கோட்பாட்டிற்கும் தலைவணங்காத தன்மையும்தான்.

## ஃப்ளாஷ்பேக்



### அண்ணா அறிவாலயம் கட்டிட நிதி!



'கோல்டன்' பஷீர்

1986-ஆம் ஆண்டு ஜூன் மாதம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, அண்ணா அறிவாலயக் கட்டட நிதிக்கு ரூ.200 வழங்கினேன். அப்போது என்னை விசாரித்ததோடு, தலைவர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியும் அனுப்பினார். அந்த நாள் சந்திப்பை என் வாழ்நாளில் என்றும் மறக்கவே முடியாது. அப்போது, அருகில் அய்யா சண்முகநாதன் உடன் இருந்தார்.

– 'கோல்டன்' பஷீர்,
அமைப்பாளர், கலை இலக்கிய அணி பகுத்தறிவுப் பேரவை,
வந்தவாசி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கழகக் கொடி வாரம்!

1966-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 20-ஆம் தேதி முதல் 27- ஆம் தேதி வரை, பொதுத் தேர்தலுக்காகக் கழக நிதி திரட்டும் முயற்சியின் முதல் கட்டமாக, 'கொடி வாரம்' கொண்டாடப்பட்டது. சென்னையில் நாவலர், நெல்லையில் கலைஞர், சேலத்தில் என்.வி.நடராசன், திருச்சியில் கே.ஏ.மதியழகன், கடலூரில் சத்தியவாணிமுத்து, மதுரையில் பேராசிரியர், இராமநாதபுரத்தில் தில்லை வில்லாளன், கோவையில் டி.கே.சீனிவாசன், சித்தூரில் ஏ.பி.ஜனார்த்தனம், பெங்களூரில் இராம.அரங்கண்ணல் எனக் கழக முன்னணியினர் கொடி வாரத்தைத் தொடங்கிவைத்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131